**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**

**திருவண்ணாமலை மாவட்டம்.**

**அசல் வழக்கு எண்.53/19**

2024-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 18-ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய, திருமதி.விஜயா, என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திருமதி.பெ.சீதாதேவி, மூன்றாம் நிலை மேசை எழுத்தர் என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | - | திருமதி.விஜயா, |
| வயது | - | 60 |
| தந்தை/கணவர் பெயர் | - | க/பெ.செல்வமணி |
| கிராமம் | - | உக்கல்பெண்டை |
| வட்டம் | - | |
| சாதி | - | |
| சமயம் | - | |
| தொழில் | - | |

18.09.2024

**வா.சா.1.**

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

இவ்வழக்கில் தாவா சொத்து சம்மந்தமாக தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் எனது சகோதரர் மார்கபந்து மனு அளித்து அதற்கு பதில் அளிக்கப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தை என் தரப்பில் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்துள்ளேன். எனது சகோரதரர் மார்கபந்திற்கும் இத்தாவா சொத்திற்கும் என்ன சம்மந்தம் உள்ளது என்றால் எனக்கு வழிமுறை தெரியாது. அதனால் என் சகோதரர் உதவி புரிகிறார். மேற்படி ஆவணத்தில் 60 நபர்களுக்கு நமூனா வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆவணத்தில் எந்த மனை குறித்து என் கணவருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது.

நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2ல் இணைக்கப்பட்டுள்ள ஆ-பதிவேடு நகலின் சர்வே எண்.782/1 அரசு புறம்போக்கு நத்தம் என குறிப்பிடப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியாது. நான் பட்டா பெற்றுள்ள இடம் சர்வே எண்.782/1 அல்லது 781 என்பது குறித்து எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. ஆ-பதிவேடு நகலில் சர்வே எண்.782/2ல் பிரதிவாதி லட்சுமி பெயர் குறிப்பிடப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியாது. சுமார் 10 வருடத்திற்கு முன்பு சென்னைக்கு சென்றுவிட்டோம். பிரதிவாதி லட்சுமி 2014ஆம் வருடம் வீடு கட்ட அடிதளம் போட்டார். நாங்கள் அப்போது தடுத்தோம். அவர் வீடு கட்ட ஆரம்பித்த வருடம் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. பிரதிவாதி பிரச்சனை செய்தபோது நாங்கள் அதுகுறித்து புகார் அளித்தோம். புகாரின் நகல் மற்றும் புகார் ஏற்பு ரசீது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம். வா.சா.ஆ.2ன் இணைக்கப்பட்டுள்ள ஆவணத்தின் பட்டா வழங்கப்பட்ட நபர்கள் என குறிப்பிட்டு கொடுத்துள்ள தகவலின் உரிய அதிகாரியின் கையொப்பம் இல்லாத நிலையில் அது ஏற்புடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல. மேற்படி அந்த குறிப்புகள் என் அண்ணன் மார்கபந்துவால் உருவாக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் ஏற்கனவே முதலில் தாக்கல் செய்திருந்த பிராதில் 60 நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன். திருத்த தாவாவில் எத்தனை நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் அதுகுறித்து எனது வழக்கறிஞருக்குதான் தெரியும். ஆனால் 60 நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. பட்டா வழங்கப்பட்ட பிறகு அந்த 60 நபர்களில் யார் யார் வீடுகட்டியுள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது.

என் கணவர் இறந்த பிறகு நாங்கள் அனுபவித்து வரும் இடத்திற்கு அவர் பெயரில் இருந்து எங்கள் பெயருக்கு பட்டா மாற்றிவிட்டோம். என் பெயரிலும் இதர வாரிசுகள் பெயரிலும் உள்ள பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம். நான் தமிழ்நாடு காவல்துறை இயக்குநருக்கு கொடுத்த புகாரின் பேரில் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றால் எங்களுக்கு கடிதம் அனுப்பினார்கள். நாங்கள் பட்டா வாங்கிய இடத்தில் பிரதிவாதி லட்சுமி

வீட்டை தவிர வேறு வீடுகள் இல்லை. அரசாங்கதில் எங்களுக்கு பட்டா வழங்கப்பட்டதாக நான் கூறுவது சுத்தமான பொய் என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே சர்வே எண்.782/1ல் பிரதிவாதி மாமனாருக்கு மேற்படி நத்தம் சர்வே எண்ணில் பட்டா வழங்கப்பட்டு அவர் அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. அவர் அனுபவத்து வரும் இடத்தில் பக்கத்தில் ஒரு முருகேச கவுண்டர் என்பவரிடமிருந்து இடம் கிரையம் பெற்று அதையும் அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. தற்போது அரசாங்கத்தால் மொத்த இடமும் எடுத்துக்கொள்ளப்பட்டு பிரித்து கொடுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே லட்சுமி குடும்பத்திற்கு பட்டா இருந்ததா என்று சொன்னால் அந்த இடத்தில் இல்லை. வேறு இடத்தில் உள்ளது. நான் தற்போது சாட்சியம் அளிக்கும் சொத்துதான் பிரதிவாதி லட்சுமிக்கு அரசாங்கத்தால் பட்டா அளிக்கப்பட்டுள்ள சொத்து என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே சொத்தின் அனுபவத்தில் நாங்கள் இருந்திருந்தால் சர்வே எண்.782/1 ஆ-பதிவேட்டில் எங்கள் பெயர் இடம் பெற்றிருக்கும் நாங்கள் அனுபவிக்காத காரணத்தால்தான் பெயர் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பட்டா இடம் நிபந்தனையோடு அரசாங்கத்ததால் வழங்கப்பட்டது என்றும், பட்டா வழங்கப்பட்டவுடன் அந்த இடத்தில் நாங்கள் வீடு கட்டியிருக்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்கு எந்த பிழைப்பும் இல்லாததால் ஓலை வீடு மட்டும் கட்டியிருந்தோம் அது தரைமட்டமாகிவிட்டது.

என் கணவருக்கு வந்த பாக சொத்தில்தான் எனக்கு உரிமையுள்ளது என்றும், தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லையென்று சொன்னால் சரியல்ல. என் கணவருக்கு வழங்கப்பட்டுள்ள பட்டாவின் ஐக்குபந்தி எனக்கு தெரியாது. பிரதிவாதி 2014ம் வருடம் வீடு கட்டியதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றும் 2000ம் வருடமே பிரதிவாதி வீடு கட்டிவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. நான் பட்டா வாங்கியதாகவும் அனுபவித்ததாகவும் கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும், நான் இத்தாவாவை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றும் எனவே பிரதிவாதியின் செலவுத்தொகையோடு இத்தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.